# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

மனு எண்: 560/2017/ஊராட்சி

ஆணை எண்: 090/2017

நாள்: 2/05/2017

திரு. P. ராஜ் நாராயணன்,
கு. 4/14, வடக்கு தெரு, நாள்குடி,
ஸ்ரீ வைகுண்டம் Po.,
தூத்துக்குடி மாவட்டம் — முறையீட்டு மனுதாரர்

முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்,
கே. வரதராஜபுரம் ஊராட்சி — எதிர் மனுதாரர்

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், கே. வரதாராஜபுரம் ஊராட்சியில் வசிக்கும் திரு.P. ராஜ் நாராயணன் என்பவர், அவருடைய 21.4.2017 நாளிட்ட புகார் மனுவில் அவர் கே. வரதாராஜபுரம் ஊராட்சியில் 2001-2006-ஆம் ஆண்டு வரை ஊராட்சி உதவியாளராக பணிபுரிந்து வந்ததாகவும், அப்போது ஊராட்சி மன்ற தலைவர், அவருக்கு பணியேதும் வழங்காமல் பணியிலிருந்து விலகுமாறு துன்புறுத்தினர் என்றும், ஊராட்சி உதவி இயக்குநர், அவரை பணியிடை நீக்கம் செய்ய சொல்லி இருக்கிறார் எனக் கூறி பணி செய்யவிடாமல் பலரது மிரட்டலுக்கு ஆளாகியதாகவும், இதன் காரணமாக மன உளைச்சல் ஏற்பட்டு வெளியூர் சென்று விட்டார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் ஊராட்சி மன்ற சாதாரண கூட்ட தீர்மானத்தின் மூலம் அவரை பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், 1994-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டம், பிரிவு 83-ன் கீழ் ஊராட்சி பணியாளர்களை நீக்குவதற்கு ஊராட்சி மன்ற தலைவருக்கு அதிகாரம் கிடையாது என்றும், அவர் மீது எவ்வித குற்றச்சாட்டுகளோ அல்லது பணி நீக்கத்திற்கான காரணத்தை தெரிவிக்கும் கடிதமோ வழங்காமல் பணி நீக்கம் செய்தது சரியல்ல என்றும் தெரிவித்து, இது குறித்து நன்கு விசாரணை செய்து, அன்னாருக்கு ஊராட்சி உதவியாளர் பணியிடம் வழங்கக் கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு கே. வரதராஜபுரம் ஊராட்சியை சார்ந்தது ஆகும். எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 2-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

**பெறுநர்**

திரு. P. ராஜ் நாராயணன்,
நெ. 4/14, வடக்கு தெரு, நனன்குடி,
ஸ்ரீ வைகுண்டம் (அஞ்சல்),
தூத்துக்குடி மாவட்டம் - 628 601

நகல்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
தூத்துக்குடி மாவட்டம்,
தூத்துக்குடி (இணைப்புகளுடன்)